Registered as a Newspaper in Ceylon *

# ஈழநாடு

EELA NADU

[illegible] : 49 மலர் 9
[illegible] 535 இதழ் 169
National Tamil Daily தேசிய தினசரி

[illegible] பிலவங்க ஆடி 14 ரபி ஆகி. 21 ஞாயிற்றுக்கிழமை [30-7-67]




# மத்தியபிரதேசத்திலும் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது

## "யாழ். மக்களுக்கு தீராத கஷ்டம்"

### வடபகுதி பஸ சேவைபற்றி அதிருப்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு வட இலங்கையிலுள்ள பிரயாணிகள் சங்கங்கள் சேர்ந்து வட இலங்கை பிரயாணிகள் பொதுப் போக்குவரத்துச் சம்மேளனத்தை அமைக்கத் தீர்மானித்துள்ளன. இப்பிரயாணிகள் சங்கங்களின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

சீர்குலைந்துவரும் போக்குவரத்துச் சேவையைத் திருத்தி அமைக்கவும், புதிய நேர அட்டவணையின்படி, பஸ் சேவையை செயல்படுத்தவும் இச்சம்மேளனம் முயற்சியெடுக்கும்.

வடமாகாணத்திலுள்ள எல்லாப் பிரயாணிகள் சங்கங்களிலிருந்தும் இரு பிரதிநிதிகளைச் சேர்த்து சம்மேளனத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்குழுவில் கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திருவாளர்கள் ரி. வேலுப்பிள்ளை, கே. நேசையா, சி. இரத்தினசபாபதி, ச. செல்லத்துரை செ. பரராசசேகரம். ரி. குமாரசாமி, எஸ். கணேசன், ச. வயிரமுத்து, வி. கந்தையா.

பஸ் சேவை சம்பந்தமான அவசர கோரிக்கைகளை இவ் அமைப்புக்குழு அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அறிவித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

பஸ் போக்குவரத்துக் சேவை சீர்குலைந்து. யாழ்ப்பாண மக்களுக்குத் தீராத கஷ்டத்தைக் கொடுத்துள்ளது என்று பல சங்கப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். பிராந்திய முகாமையாளருக்குப் பல முறை அறிவித்தும் பயனளிக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

[அ.நி.]

## சட்டசபையில் நிகழ்ந்த கைகலப்பு

### இனிஇடைத்தேர்தலா; எதிர்க்கட்சிஆட்சியா?

போபால், ஜூலை 29

**மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் அரசாங்கம் இன்று வீழ்ச்சியடைந்தது. சென்ற பொதுத் தேர்தலின் பின் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அரசாங்கம் ஐந்து மாத கால ஆட்சியுடன் இன்று வீழ்ச்சியடைந்தது.**

மத்திய பிரதேச சட்டசபையின் இன்றைய கூட்டத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டு எதிர்க்கட்சி அங்கத்தவர் சிலருக்கும் ஆளும் கட்சியான காங்கிரஸ் அங்கத்தவர் சிலருக்குமிடையில் கைகலப்பும் ஏற்பட்டது.

மத்திய பிரதேச ராஜ்யத்தில் காங்கிரஸ் அரசாங்கம் இன்று வீழ்ச்சியடைந்ததுடன் இந்தியாவில் இப்பொழுது ஒன்பது ராஜ்யங்களில் காங்கிரஸ் பதவியை இழந்திருக்கிறது.

சென்ற பொதுத் தேர்தலில் மத்திய பிரதேசத்தில் பெரும்பான்மைப் பலம் பெற்ற காங்கிரஸ் கட்சி திரு. டி. பி. மிஸ்ரா தலைமையில் மந்திரி சபை அமைத்தது.

சமீபத்தில் கருத்து வேற்றுமை காரணமாக 36 பேர் காங்கிரஸிலிருந்து விலகிக் கொண்டதால் அங்கு நெருக்கடி ஏற்பட்டது. கட்சியிலிருந்து விலகியவர்கள் தங்கள் பதவியிலிருந்தும் விலகி மீண்டும் தேர்தலில் நிற்கவேண்டுமென்று திரு மிஸ்ரா தெரிவித்திருந்தார். இதற்கிடையில் முதன் மந்திரியின் ஆலோசனையின் மீது சட்ட சபைக் கூட்டத்தொடரை கவர்னர் கலைத்திருந்தார். இதை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்து ராஷ்டிரபதியிடம் சென்று முறையிட்டிருந்தனர்.

காங்கிரஸ் மந்திரிசபை வீழ்ச்சியடைந்தால் மத்திய பிரதேசத்தில் இடைக்கால தேர்தல் நடைபெறுவது நிச்சயம் என்று முதன் மந்திரி மிஸ்ரா அறிவித்திருந்தார்.

மீண்டும் மத்திய பிரதேச சட்டசபைக் கூட்டம் நேற்று ஆரம்பமானது. இன்று கல்விமான்ய மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெற்றபோது காங்கிரஸ் கட்சிக்கு சார்பாக 137 வாக்குகளும் எதிர்க்கட்சியினருக்குச் சார்பாக 153 வாக்குகளும் கிடைத்தன.

காங்கிரஸிலிருந்து விலகியவர்களில் இருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியாமல் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக காங்கிரஸ் அங்கத்தவர் ஒருவர் சபாநாயகரிடம் புகார் செய்ததைத் தொடர்ந்து அவ்விருவரும் சபைக்கு வரவழைக்கப்பட்டு வாக்களித்தனர்.

வாக்கெடுப்பு சுதந்திரமாக நடைபெறாமல் எதிர்க்கட்சியினர் [illegible]லயிட்டதாகத் தெரிவித்து முன்மந்திரி திரு மிஸ்ராவும் ஆளும் கட்சி அங்கத்தினரும் வெளிநடப்புச் செய்தனர்

காங்கிரஸ் மந்திரிசபை வீழ்ச்சியடைந்து விட்டது. அடுத்து மத்தியபிரதேசத்தில் எதிர்க்கட்சியினரின் கூட்டணி ஆட்சிக்குவருமா, அல்லது சட்டசபை கலைக்கப்பட்டு இடைத் தேர்தல் நடைபெறுமா என்று மத்தியபிரதேச மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

## "நன்கொடைப் பணம் பெற கயரோகிகள் போல் நடிக்கின்றனர்"

### நிலைமையை மாற்ற கயரோக நிவாரணசங்கம் செய்யும் சேவைக்கு வட்டுக்கோட்டை எம். பி. பாராட்டு

சுழிபுரம், சனி

"அரசாங்கத்தால்கொடுக்கப்படும் நன்கொடைப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக எத்தனையோ கயரோகிகள் தமது நோயை வளர்ப்பதுபோல் நடித்து பணத்தைப் பெற்றுவருகின்றனர். ஆனால் இந்த நிலைமையை மேலும் நீடிக்காமல் இருக்க இலங்கை கயரோக நிவாரண சங்கத்தினர் செய்துவரும் சேவை மிகவும் பாராட்டத்தக்கது. கயரோகம் ஒரு மிகக் கொடிய வியாதி. இந்நோயை முளையிலேயே கிள்ளவேண்டும்." என்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசிய வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் கயரோகக் காட்சிகளை சித்தரிக்கும் கயரோகப் பவனி நடைபெற்றது. விழாவுக்கு கிளைச் சங்கத் தலைவர் டாக்டர் க. சிவஞானரத்தினம் தலைமை வகித்தார்.

தலைவர் தமது தலைமையுரையில் "நாம் பேசுவதைவிட்டு செயலில் காரியத்தை நிறைவேற்றவேண்டும். விளம்பரத்துக்காக செய்யப்படும் சேவையால் எவ்வித பலனும் இல்லை. கிராமத்து மக்களிடம் சென்றுநோயின் தாற்பரியங்களை எடுத்துக்கூறவேண்டும். அப்போது தான் நோய் பரவாமல் செய்யவும், மக்கள் சீராக வாழவும் முடியும். திரு. சி. தியாகராசா, முதலியார் வி. மகேசன் ஆகியோர்வரவேற்புரை நிகழ்த்தினர். காலம் சென்ற சங்கத் தாபகத்தலைவர் டாக்டர் எச். பி. செல்லையாவின் உருவப்படத்தினை திருமதி ஜெயசூரியா திறந்து வைத்தார்.

தாபசசங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ஜே. எச். எப். ஜெயசூரியா தமது உரையில் இவ்வியக்கம் உலகம்பூராவும்திறம்பட சேவையாற்றி வருவதால் எல்லோரும் இவ்வியக்கத்தில் சேரவேண்டுமென்று கூறினார்,

திருமதி இ. நவரத்தினம், டாக்டர் அ. செல்வரத்தினம் உட்பட மற்றும் பலர் பேசினர். சங்கச் செயலாளர் உ. ந. தேவகடாட்சம் சேவையைப் பாராட்டி தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி வேர்ணன் அபயசேகரா பரிசில்களை வழங்கினர்.

## வேலைநிறுத்தம

புதுடில்லி, ஜூலை 29

ஏர் இந்திய விமான சர்வீர்ஸைச் சேர்ந்த என்ஜினியர்கள் இன்று காலை வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். நிர்வாகத்தினர் தமது கோரிக்கையை நிறைவேற்றுதலைத் தொடர்ந்தே வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

## கயரோகத்தடுப்பு பணிக்கு தொண்டர்கள் தேவை

### யாழ். அரசாங்க அதிபர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இலங்கையில்பெரும்பிரச்னையை உண்டுபண்ணும் கயரோகத்தைத் தடுப்பதில் அரசாங்கம் தன்னாலான முழுச்சேவையையும்செய்து வருகின்றது. கயரோகிகளுக்கு உடனடிச் சிகிச்சை அளிப்பதன்மூலமும்போதிய விளக்கங்களையும் கொடுப்பதன்மூலமும் கயரோகத் தடுப்பு நடவடிக்கைகள்முழுமூச்சுடன் நாடெங்கும் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன. கயரோகத் தடுப்பைப் பொறுத்த அளவில் இலங்கை அரசாங்கமும், கயரோகத் தடுப்பு நிவாரண சங்கமும் ஒரே மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு உழைப்பது வரவேற்கத் தக்கதொன்றாகும். கயரோகத் தடுப்பு நிவாரணசங்கத்தின் பூரணசேவை மேலும் பலனளிக்க இன்னும் பல

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

''சத்தியம் என்னும் திருக்கோயிலை அடைய விரும்புவோன் அஹிம்சை என்னும் நெறியில்தான் இயங்கவேண்டும்.'' ''அஹிம்சைக்கு ஆண்மை தேவை. அதுவே வீரத்தில் சிறந்த வீரனின் வீரம்''.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

சர்வசித்து ஆண்டு பிலவங்க வருடம் ஆடி மீ 14 உ 30-7-67


## தேவையற்ற சர்ச்சை

எதற்காகவோ கொழும்புக்கு வந்துள்ள தமிழ் நாடு மேல்சபை அங்கத்தவரும் தி. மு. க. பிரமுகருமான திரு. சி. பி. சிற்றரசு கொழும்பில் இருந்து வெளியாகும் ஒரு தமிழ்ப்பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில சென்னை நகரில் நடைபெற்ற தீ விபத்து சம்பவம் பற்றி 'காங்கிரஸ் காரரைச் சம்பந்தப் படுத்தி எதையோ சொல்ல, வேறு எதற்காகவோ இலங்கை வந்துள்ள சென்னை மாநகராட்சிமன்ற காங்கிரஸ் குழுத் துணைத் தலைவரும், காங்கிரஸ்பிரமுகருமான திரு. என். ஜம்புலிங்கம் அதை மறுத்து தி. மு. க.வினரைச் சம்பந்தப்படுத்தி மற்றோர் அறிக்கைவிட, இப்படி இந்தியாவின் ஒரு மாகாணமான தமிழ்நாட்டின் உள்நாட்டுப் பிரச்னையும் அரசியல் பிரச்னையும் இலங்கையில் 'சந்தி சிரிக்கிறது!' இது தமிழ் நாட்டுக்கோ, இந்தியாவுக்கோ, மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் தொடர்புள்ள இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கோ பெருமையுமல்ல; நல்லதுமல்ல.

இந்தியாவில், தாய்லாந்தில், வியட்னாமில் மற்றும் பல இடங்களிலும் பௌத்தர்கள் வாழுகிறார்கள். இலங்கையில் பெரும்பான்மையான பௌத்தர்கள் வாழ்கிறார்கள். இந்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் மதத்தால்—பௌத்த— மதத்தால்—தொடர்பு இருக்கிறது; உறவு இருக்கிறது; இதனால்தான் வியட்னாமில் பௌத்தர்கள் சிலர் தீக்குளித்து பெரும் போராட்டம் நடத்தியபோது, அந்தச் சம்பவத்தை வைத்து அந்நாட்டு பௌத்தர்களின் உரிமைக்காக ஐ. நா. சபையில் இலங்கை குரல் எழுப்பியது.

சோவியத் யூனியனில் கம்யூனிஸம் இருக்கிறது. சீனாவிலும் கம்யூனிஸம் இருக்கிறது. இலங்கையிலும் கம்யூனிஸம் உண்டு. சீனாவிலும் சோவியத்யூனியனிலும் எது நடந்தாலும் இங்கும் அதற்கு ஆதரவும் வாழ்த்தும் தெரிவிக்கப்படுகிறது. இது இலட்சியம், கொள்கை அடிப்படையில் ஏற்பட்டுள்ள தொடர்பு; உறவு.

இதேபோல் அல்லது இதைவிட அதிகமாக மதம்மொழி, இனம், கலை, கலாச்சாரம் ஆகியவை காரணமாக இலங்கைக்கும், இந்தியாவுக்கும் தொடர்பும், உறவும் இருக்கிறது.

ஆயினும் இலங்கை ஒரு நாடு; வியட்னாம், தாய்லாந்து, சீனா, சோவியத் யூனியன், இந்தியா வேறு நாடுகள்.

அந்த நாடுகள் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடமாட்டா; தலையிடக்கூடாது. அதேபோல் அந்த நாடுகளின் உள்நாட்டுப் பிரச்னைகளும், சர்ச்சைகளும் நமது நாடான இலங்கைக்குள் நுழைவது நமது நாட்டுக்கு நல்லதல்ல; அந்த நாடுகளின் நற்பெயருக்கும் அழகல்ல தங்கள் நாட்டுப் பிரச்னைகளையும், சர்ச்சைகளையும் வெளிநாடு ஒன்றல் கிளப்பிவிடுவது அந்த நாட்டவருக்குப் பண்புமல்ல.

இலங்கையில் வெள்ளம், சூறுவளி போன்ற இயற்கை அழிவுகள் ஏற்பட்டால் வெளிநாடுகள் பல அனுதாபப் படுவதும் உதவிக்கு வருவதும் இயல்பு. இதே போல் இந்தியாவில் வெள்ளமோ, வரட்சியோ ஏற்பட்டு சேதம் ஏற்பட்டாலும் உலகில் வேறு எங்கேனும் மக்கள் பாதிக்கப் பட்டாலும் அதற்காக இலங்கை மக்கள் அனுதாபப் படுவதும் இயல்பு. இது மனிதப் பண்பும் கூட. இதே போல் தான் சமீபத்தில் தமிழ் நாட்டில் சேரிப் பகுதிகளில் திடீர் திடீரென குடிசைகளில் தீப்பிடித்து ஆயிரக் கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்து நிர்க்கதியான போது இலங்கை வாழ் மக்களும் கவலையடைந்தனர்.

தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் உள்ள உறவும் தொடர்பும் இன்று நேற்று ஏற்பட்டதுமல்ல, இதர நாடுகளுக்கும் இதர நாட்டு மக்களுக்கு முள்ளது போன்ற குறைவானதுமல்ல.

சென்னை சேரிப் பகுதி தீ விபத்து சம்பவங்கள் பற்றி தமிழ் நாட்டில் அரசியல் காரணம் கற்பிக்கப்பட்ட போதே இங்கு பலரும் கவலையடைந்தனர். இந்நிலையில் அங்கிருந்து இங்குவந்த 'பொறுப்புள்ள' சிலர் அதே அரசியல் சர்ச்சையை இங்கும் கிளப்பியிருப்பது வேதனையளிப்பதாகும்.

'வாழும் நாட்டுக்கு விசுவாசமாக இருங்கள்' என்று வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களுக்கும் இந்திய வம்சா வழியினருக்கும் மகாத்மா காந்தி தொடக்கம் இன்றைய காங்கிரஸ் அக்ராசனர் காமராஜர் வரை காங்கிரஸ் தலைவர்கள் கூறி வந்துள்ளனர். இதையேதான் தி. மு. க. தலைவரும் தமிழ் நாடு முதல் அமைச்சருமான திரு. சி. என். அண்ணாதுரையும் கூறி வருகிறார். அண்ணாவின் அன்பைப் பெற்ற திரு. சிற்றரசும், காமராஜரின் மதிப்பைப் பெற்ற திரு. ஜம்புலிங்கமும் இந்திய நாட்டின், தமிழ் நாட்டின் பிரச்னையை-குடும்பத் தகராறை வெளிநாட்டில் 'பெரிது படுத்துவது' தமிழ் நாட்டுக்கோ, இந்தியாவுக்கோ, காங்கிரசுக்கோ, தி. மு. கழகத்துக்கோ நல்லதா, பெருமையா?

தங்கள் நாட்டின் பெருமையைக் குறைக்கும் செயலிலும் இந்நாட்டில் வாழும் இந்திய வம்சா வழியினருக்கும், இன்னும் மொழி, கலை, கலை கலாசாரத்தினால் ஒன்று பட்ட இந் நாட்டுத் தமிழ் மக்களுக்கும் சங்கடத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்தும் செயலிலும் பேச்சிலும் ஈடுபடாமல் இலங்கைக்கும் குறிப்பாக தமிழ் நாட்டுக்கும் பொதுவாக இந்தியாவுக்கும் நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும் நற்பணியில் இங்கு வந்தவர்கள் ஈடுபட்டால் அவர்களுக்கும் பெருமை; இரு நாடுகளுக்கும் நன்மை.

* பூரிப்பு ஒரேபூரிப்பு... * ஒடியலும் குரக்கனும் கேக்காகிறது * கலைசொட்டும் கைத்தொழில் * கவர்ச்சிக் காளைகள்

# வடக்கு விவசாயிகளின் உழைப்புத்தான் யாழ். கைத்தொழில் விவசாய பொருட்காட்சி

க. கணேசலிங்கம்

சாதாரணமாக நாம் சந்தையில் காணும் காய்கறிகளை பூதக்கண்ணாடி கொண்டு பார்ப்போமானல் எப்படி அந்தக் காய்கறிகள் நமக்குக் காட்சியளிக்குமோ அப்படிக் காட்சியளிக்கும் காய்கறிகளை யாழ்ப்பாணம் விவசாய கைத்தொழில் பொருட்காட்சிக்கு செல்பவர்கள் நேரில்கண்டு கொள்ளலாம்.

யாழ்ப்பாணக் கமக்காரனின் நெற்றிவியர்வை முத்துமுத்தாக நிலத்தில் சிந்தியதால் முளைத்த அந்தக்காய்கறிகளும் கனிவகைகளும் பார்ப்பவர்களின் பசியைப் போக்குகின்றன.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் சென்ற வியாழக்கிழமை முதல் நடைபெற்றுவரும் இந்தப் பொருட்காட்சியில் விவசாயத்துறையில் யாழ்ப்பாணம் எவ்வளவுதூரம் முன்னேறிக் கொண்டிருக்கிறதென்பதை ஓரளவு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

### பூரிப்பு ஒரேபூரிப்பு

பொன்னிறத்துடன் பொலிந்து கிடக்கும் வெங்காயம். இளம்பசுமைசெறிந்து கிடக்கும் மிளகாய், மலைப்பாம்புபோல் நீண்டிருக்கும் புடோலங்காய், செம்மைச் சிகப்பு ஊறித் திரண்டு கிடக்கும் தக்காளி நிலத்துள் கிடந்து விளைந்து கொழுத்த மரவள்ளி, ஊதிப்பருத்த பூசணிக்காய், இப்படிக்காய்கறிகள்யாழ்ப்பாண மண்ணில் தமது விளைச்சலின் வெற்றியை பொருட்காட்சியின் முகப்புக்கு அருகில் பூரிப்போடு காட்டிக் கொண்டிருக்கின்றன,

### ஒடியலும குரக்கனும 'கேக்'காகிறது

விவசாயப்பகுதியின் ஒருபுறத்திலிருந்து மற்றப்புறத்துக்கு செல்பவர்கள் யாழ்ப்பாணத்தின் சின்னமாகத் திகழும் பனையின் ஒடியலும், குரக்கனும் சேர்ந்து மாவாகி அழகு வண்ணங்களாலான 'கேக்' ஆக அடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். திருநெல்வேலி பெண்கள் விவசாயப்பாடசாலையினர் இந்த அற்புத வேலைகளை அழகுடன் செய்திருக்கிறார்கள். பனையைப் பற்றி மறந்து கொண்டிருப்பவர்களுக்கு அங்கிருக்கும் நுங்கு ஜாம் அதன் இனிமையை நினைவூட்டுகிறது. பனங்களியிலிருந்து பனாட்டும் பனம்பணியாரமும் மட்டுமல்ல சொக்கலேட்டுகள் கூட சரிக்கட்டலாம் என்பதும் இங்குசென்றபின் அறிந்து கொள்ளக் கூடியதாக விருக்கிறது. பனையின் பயன்களை அறிந்து பயனடைய இந்தப்பகுதி பெரிதும் உதவுகிறது

பலா, மா, வாழை இவற்றின் சுவை சொட்டும் பெரும் கனிகள் விவசாயப் பகுதியின் மற்றொரு பகுதியில விருந்தாக விருக்கிறது.

கனிகளையும், காய்களையும் கிழங்குகளையும் கண்டு களித்து விட்டு மற்றொருபுறம் திரும்புபவர்களை கால்நடை [illegible] வருவதும் [illegible] மிக்க காளைகள் கட்டுக்கடங்காமல் நிற்கும் வீரக்காட்சி கால்நடைப்பண்ணைகள் நடத்துபவர்களும் மற்றவர்களும் கண்டுகளிக்க வேண்டிய ஒரு காட்சி. இவ்விதகாளைகளை எவ்விதம் உருவாக்கலாம் என்பதற்கான விளக்கமும் இங்கு கிடைக்கிறது.

போஷாக்குத் தரும் முட்டைகள், கொழுகொழு என்றிருக்கும் கோழிக்குஞ்சுகள் கொண்டபகுதி கோழி வளர்ப்பில் ஆர்வம கொண்டவர்கள் அறிந்து வைத்திருக்கவேண்டிய பல அரிய விஷயங்களை அறியத் தருகிறது.

### கங்கை திருமபட்டும

வரட்சியிருந்தும் உழைப்பால் பயிர்களைச் செழிப்பாக வளர்க்கும் வடபகுதி விவசாயிகளுக்கு நீரும் இருந்துவிட்டால் நாட்டின் உணவுப் பிரச்னையை எப்படித் தீர்ப்பார்கள் என்பதை விளக்கும் பகுதி பலரது கவனத்தைக் கவரக்கூடியதாக விருக்கிறது. மகாவலி கங்கையின் திருப்பம்பற்றிய தத்தான் இப்பகுதிககுத் திருமபியதும் நாம் பார்க்கிறோம் வரட்சிப் பகுதியை எலலாம் வளமானதாக மாற்ற கங்கை திரும்பும் காலம் விரையட்டும்.

உப்பு நீரை நன்னீராக்கும் திட்டங்களும் எதிர்கால வளத்துக்கு வழிகாட்டுகின்றன. விவசாயிகளையும் வட பகுதி மககளையும் குளிரச் செய்யும் இப்படிப்பட்ட பல திட்டங்கள் வரையப்பட்டு ஆங்காங்கே வைக்சப் பட்டுள்ளன. இவை எல்லாம் எதிர்காலத்தில் நாம் எவ்வளவோ நம்பிக்கைவைக்க ஊக்கமளிக்கிறது.

### கைத்தொழில் கவர்கிறது

கைத்தொழில் பகுதியில் இருக்கும் சித்திரக் கைத்

[6-ம் பக்கம் பார்க்க]

# நாடும் நடப்பும்

யாழ்ப்பாண நகரில் சென்ற இரண்டு தினங்களாக மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு.

யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு பெரியாரின் இல்லத்தில் உள்ள மதத்தலைவர் ஒருவரின் திருஉருவப்படத்திலிருந்து திருநீறு விழுவதாக சிலரும் திருநீறு மட்டுமல்ல குங்குமமும் சொரிவதாக வேறு சிலரும் மக்கள் மத்தியில் கதைகட்டி விட்டனர்.

இந்த அதிசயத்தை, அற்புதத்தைக் காண்பதற்காக பலரும் பல இடங்களிலிருந்தும் அந்த வீட்டுக்குச் சென்றனர். அங்கு சென்றவர் யாரும் அந்தக் காட்சியைக் கண்டதாகத் தெரியவில்லை.

தென்னை மரத்தில் நடராஜர் உருவம் வெளிப்பட்டுள்ளதாகவும் பனை மரத்தில் பிள்ளையார் உருவம் தோன்றியிருப்பதாகவும் இப்படி வேறு பல 'கதை'களையும் கட்டிவிடுவதுண்டு. சிலர் இதைப் பிழைப்புக்காகவும் செய்யக்கூடும். ஆனல் இந்த விஷயத்தில் அப்படி யாரும் நினைக்கஇடமில்லை.

ஏனே, எப்படியோ, யாரோ இந்தக் கதையைக் கட்டிவிட்டார்கள்.

உலகில் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன; அதிசயங்கள் நடந்திருக்கின்றன. விடந்தீண்டி மாண்ட சிறுவன் உயிர்பெற்றெழுந்ததும் பாண்டியமன்னனின் வெப்ப நோய் நீங்கியதும் இன்னும் பல அற்புதங்களும் திருநீற்றின் மகிமையால் நடைபெற்ற அற்புதங்கள் தாம். இன்றும் இவை நிகழக்கூடும்.

ஆனல் எங்கும் எதிலும் சுயநலத்தையே கொண்டு வாழும் நமக்கு ஆண்டவன் தரிசனம் அவ்வளவு எளிதில் கிடைத்துவிடுமா? அவன் திருவிளையாடல்கள் தான் சுலபமாகக் கண்ணுக்குத் தோன்றுமா?

சினிமாத்திரைகளில் 'ஆண்டவனை' கண்டு பழகிவிட்ட நாம் கஷ்டமின்றி சுலபமாக அவன் தரிசனம் கிடைத்து விடுமென எதிர்பார்க்கிறோம்.

நாயன்மார்களும்ஆழ்வார்களும தங்களையே தியாகம் செய்து, தங்களையே வருத்தி திருத்தொண்டு செய்தனர், அதன் மூலம் அவன் அருள் பெற்று அவன் தாள்வணங்கி அவன் தரிசனம் பெற்றனர்.

நாயன்மார்களையும் ஆழ்வார்களையுமே மறந்துவிடும் நமக்கு தென்னைமரம், பனைமரம் மூலம் அவன் தரிசனம் சுலபமாகக் கிடைத்து விடுமா

அவன் தாள் வணங்கவும் அவன் அருள் கிடைக்க வேண்டும்,

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண நகரில்வெகு விரைவில் ஒரு 'லக்சல' திறக்கப்படவிருக்கிறது. 'லக்சல' என்பது 'லங்கா சாலை' என்ற அர்த்தமுடையதாம். கொழும்பில் தான் இது முதலில்ஆரம்பிக்கப்பட்டது இலங்கையில் உற்பத்தியாகும் பொருள்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. காட்சிச்சாலையாகவும் இது விளங்குகிறது. [இங்கு சில வாரங்களின் முன் சில பொருள்கள் திருட்டுப் போனது வேறு விஷயம்]. வெளிநாட்டவரும் உள்நாட்டவரும் இங்கு நம்நாட்டுப் பொருள்களை வாங்குகின்றனர். யாழ்ப்பாணத்திலும் இப்படியொரு சாலை அமைக்கப்படவேண்டுமென்று பலரும் கேட்டனர். அந்த நல்ல காலம்வந்துவிட்டது. யாழ்ப்பாணப்பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படலாம். யாழ்ப்பாணத்து உற்பத்தியாளர்களுக்கு இது நல்ல பயன் தரும். 'லக்சல' என்றுதான் இதற்கும் பெயர் சூட்டப்படுமா? யாழ்ப்பாணத்துப் பொருள்களே இங்கு அதிகம் இடம்பெறுமாதலால் இதற்கு ''யாழ்சாலை'' என்று பெயரிட்டால் என்ன?

கொழும்புக்குச்சமீபத்தில் 'எக்கலை' என்ற இடத்தில் கைத்தொழிற்பேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சிறப்புற நடைபெறுகிறது. இங்கும் அப்படிஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்றகோரிக்கை நிறைவேறவிருக்கிறது. எந்த இடத்தில் அது அமையுமென்று இன்னும் நிச்சயமாகச்சொல்ல முடியவில்லை. இடத்தைப் பொறுத்துப் பெயரும் அமையலாம். இடமும் பெயரும் போதாது சிறந்த பொருள்களும் உற்பத்தியாகவேண்டும்.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரங்களின் காரணமறிய ஜோன்சனின் விசேஷ கமிஷன்

## முதற்தடவையாக இன்று கூடுகிறது

### மார்டின் லூதர் கிங் பிரசாரம்

வாஷிங்டன், ஜூலை 29

அமெரிக்காவில் நடைபெற்ற இனக் கலவரங்களுக்கான காரணங்களை ஆராயும் பொருட்டு ஜனாதிபதி ஜோன்சன் நியமித்துள்ள விசேஷ கமிஷன் இன்று முதலாவது கூட்டத்தை நடாத்தவிருக்கிறது.

இந்த விசேஷ கமிஷனில் கறுப்பரின் முன்னேற்றத்துக்கான தேசிய சங்கமும் இடம் பெற்றுள்ளது.

**பத்திரிகை குறிப்பு**

இவ்விசேஷ கமிஷனின் நோக்கங்கள் நல்லவையெனினும், சில தீவிர நீக்ரோத் தலைவர்கள் இனக்கலவரங்களை தூண்டிவிடும் சூழ்நிலையில் கமிஷன் வெற்றியடையக்கூடிய சந்தர்ப்பம் இல்லை' என 'நியூயோர்க் டைம்ஸ்' என்னும் பிரபல அமெரிக்க பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

**டிட்ரொயிட்டில் அமைதி**

இதற்கிடையில் மிகமோசமான இனக்கலவரங்கள் நடைபெற்ற நகரான டிட்ரொயிட்டில் இப்போது அமைதி நிலவுகிறது. வழக்கம்போல் மக்கள் தத்தம் அலுவல்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். பள்ளிக்கூடங்களும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இனக் கலவரங்களின் பின்னர் அதிக நெருக்கமான போக்குவரத்தை நேற்றுத் தான் டிட்ரொயிட் தெருக்களில் காண முடிந்தது.

**கிங்கின் பிரசாரம்**

நீக்ரோக்களின் சிவில் உரிமைகளுக்குப் போராடும் அமெரிக்க நீக்ரோத் தலைவரான டாக்டர் மார்ட்டின் லூதர் கிங், நீக்ரோக்களுக்கு வீட்டுவசதிகள் பெறுவதற்காகத் தாம் நடாத்திவரும் இயக்கத்தையும் அதன் வெற்றியையும்பற்றி, நீக்ரோ மக்களுக்கு விளக்கஒரு பிரசார இயக்கச் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார்.

நீக்ரோக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை தலைவர் கிங் கண்டித்துள்ளார்.

# அல்ஜீரியாவில் பிரான்ஸ் தளம்

### காலத்துக்கு முந்தி வாபஸ்

அல்ஜியர்ஸ், ஜூலை 29

அல்ஜீரியாவிலுள்ள தனது கடைசித் தளத்தை, காலத்துக்கு முன்னதாகவே கைவிட்டுவிட பிரான்ஸ் முடிவு செய்துள்ளது.

இந்தத் தளத்தை பிரான்ஸ் 1975-ம் ஆண்டு வரைக்கும் பயன்படுத்த உரிமை இருக்கிறது. ஆனால், இவ்வருடத்துக்கிடையே தளத்திலிருந்து பிரெஞ்சு துருப்புகளை வாபஸ் பெறுவதென பிரான்ஸ் தீர்மானித்துள்ளது.

ஆனாலும், அத்தளத்துக் கண்மையில் உள்ள விமான இறங்கு தளத்தை பிரான்ஸ் 1975 வரை உபயோகிக்கும்.

---

# மா-சே-துங் எதிர்ப்பாளரை முறியடிக்க பராத்துருப்புகள்

### யந்திரப் படகுகள் ரோந்து

டோக்கியோ, ஜூலை 29

அண்மையில் மத்திய சீனாவிலுள்ள்வூஹான் மாகாணத்தில் ஏற்பட்ட கலகங்களின் போது, மா-சே-துங் எதிர்ப்பாளரைமுறியடிக்கப் பராத்துருப்புக்களும் பயன்படுத்தப்பட்டதாக டோக்கியோ வந்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்மாகாணத்துக்கு அருகிலுள்ள யாங்ஸ்டே ஆற்றோரமாக யந்திரப்படகுகள் ரோந்து சுற்றி வருகின்றனவாம்.

**எச்சரிக்கை**

'கலாச்சாரப் புரட்சியின் எதிரிகளின் கை இன்னும் ஓய்ந்துவிடவில்லை எனவும், அவர்களிடம் எதிர்காலத்தில் அவதானமாக இருக்க வேண்டுமெனவும்' சீனப் பத்திரிகையான 'மக்கள் தினசரி' எச்சரித்துள்ளது.

கன்டன் மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற கைகலப்புகளில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இக்கைகலப்புகள், தொழிலாளர்களுக்கும் செங்காவலருக்குமிடையே நடந்தன.

# "கயரோக நோயை ஒழிக்க கயரோகிகள் ஒத்துழைப்புவேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கயரோகிகளின் ஒத்துழைப்பின்றி கயரோக நோயை ஒழிக்கமுடியாது. அவர்கள் மத்தியில் இந்த நோயைப் பற்றிய நுட்பமான அறிவையும், அதன் பரிகாரம், தடுப்பு முறை முதலியன பற்றியும் விளக்க வேண்டும். இந்த விஷயத்தில் இலங்கை கயரோக நிவாரண சங்கம் செய்துவரும் சேவை பாராட்டப்பட வேண்டியது முக்கியமாகும்".

இவ்வாறு நேற்று முன்தினம் காலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்ற கயரோக தடுப்பு நிவாரண சங்கத்தின் மகாநாட்டில் உரை நிகழ்த்திய சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

இலங்கைக் கயரோக தடுப்பு நிவாரண சங்கத்தின் தலைவரான டாக்டர் ஜே. எச். எப். ஜெயசூரியா பேசுகையில் தெரிவித்ததாவது.

அரசாங்கத்தின் நோக்கமும் கயரோக தடுப்பு நிவாரண சங்கத்தின் நோக்கமும் ஒன்றாக விருப்பதால் பொது மக்கள் இவற்றுக்கு முழு உதவியும் அளிக்கவேண்டும்.

பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய ஒரு விஷயம் இருப்பதாலேயே நாம்இங்கு கூடியிருக்கின்றோம். அதே வேளையில் பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் தமது சகாக்களைச் சந்திப்பதற்கும் இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

எங்கள் சங்கத்தில் சாதி சமய இன வேறுபாடுகளே கிடையாது. எமது சங்கம் நாட்டிலுள்ள எல்லாச் சமுதாயத்தினருக்கு மிடையே நல்லெண்ணத்தையும், உறவையும் உண்டுபண்ணுகின்றது.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. வேணன் அபயசேகரா பேசுகையில், கயரோக தடுப்பு இயக்கத்தில் ஈடுபடும் தொண்டர்களை நாம் கௌரவிக்கவேண்டும் என்றும், இம் மகாநாடு மூலம் இந் நோய் பற்றிய முழுவிபரத்தையும் பொது மக்கள் அறிந்து கொள்ளலாம் என்றும் சொன்னார்.

கயரோகத் தடுப்புச்சிகிச்சைபற்றியும், தொண்டர்களினதும் பொதுமக்களினதும் தேவைகளும் இடையூறுகளும்பற்றி நடைபெற்ற கருத்தரங்குகளுக்கு டாக்டர் பி. எல்லப்பொல யாக்டர் றிச்சட்ஸ் ஆகியோர் தலைமைதாங்கினார்கள்' இக்கருத்தரங்கில் டாக்டர் இரத்தினசிங்கம், டாக்டர் தேவதாசன், டாக்டர் சின்னத்தம்பி, டாக்டர் இராஜசூரியர், டாக்டர் கீர்த்திசிங்கா, திரு. கனுகல்லே, திருமதி பெரேரா ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள். [ந. தி]

# ஆட்சி மொழி மசோதா கொண்டுவர வற்புறுத்தல்

### தென்னக எம். பி.க்கள் கையெழுத்து இயக்கம்

புதுடில்லி, ஜூலை 29

ஆட்சிமொழி மசோதாவைக் கொண்டுவரும்படியும் இந்தி பேசும் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக அதைக் கொண்டுவரத் தயங்கக்கூடாது என்றும் பிரதம மந்திரியை வற்புறுத்த தென் ராஜ்யங்களையும, ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம் ஆகிய ராஜ்யங்களையும் சேர்ந்த பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேருவும், லால்பகதூர் சாஸ்திரியும் அளித்த வாக்குறுதிகளை அமுல் நடத்துவதற்கான பொறுப்பு காங்கிரஸ் கட்சியையே சேரும் என்று இவர்கள் தயாரித்துள்ள சுருக்கமான வேண்டுகோள் ஒன்று கூறுகிறது.

இந்தவாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறினால், இந்தி பேசாத பகுதிகளில் உணர்ச்சிகள் கொந்தளித்து நாட்டின் ஒற்றுமை சிதறுண்டுபோகும் என்று அந்த வேண்டுகோளில் எச்சரிக்கை அடங்கியுள்ளது.

# மூன்றாவது நாடு மூலம் ஆட்சேபம்

### சீனாவிடம் ஜப்பான் தெரிவிக்கும்

டோக்கியோ, ஜூலை 29

பீகிங்கில் ஜப்பானிய வர்த்தகர்களும், வர்த்தக நிலையங்களும் தாக்கப்படுவதை எதிர்த்து மூன்றாவது நாடுகள் மூலம் சீனாவிடம் ஜப்பான் ஆட்சேபம் தெரிவிக்க விருக்கிறது.

சீனாவுடன் ஜப்பானுக்கு தூதரகத் தொடர்புகள் கிடையா. ஆகவே தான், அது, சீனாவுடன் தூதரகத் தொடர்புகள் கொண்ட மூன்றாவது நாடுகளின் மூலம், ஆட்சேபம் தெரிவிக்க முனைந்துள்ளது.

# பூனாவில் வெள்ளம் தணிகிறது

பூனா, ஜூலை 29

பூனாவில் முக்தா ஆறு இரு தினங்களுக்கு முன் வெள்ளப்பெருக்கெடுத்தது. இப்போது வெள்ளம் தணியத் தொடங்கிவிட்டது.

வெள்ளம் காரணமாக, பூனாவுக்கும் பம்பாய்க்குமிடையேயானரயில்போக்குவரத்து ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

**மைசூரில்**

மைசூரில் காவேரி ஆறும், அதன் கிளைகளும் பொங்க ஆரம்பித்துள்ளன.

பிரமபுத்திர ஆறு, அபாய அளவிலிருந்து குறைந்த நீர் மட்டத்துக்குத் தணிந்துள்ளது.

# பிரேரணை நிராகரிப்பு

பம்பாய், ஜூலை 29

மகாராஷ்டிர மேல் சபையை நீக்கி விடுமாறு கோரும் கம்யூனிஸ்ட் அங்கத்தவர் ஒருவரின் பிரேரணையை, மகாராஷ்டிர சட்ட சபை 27—6 வாக்குகளால் நிராகரித்தது.

# ரூ. 6 லட்சம் அந்நிய நோட்டுகள்

### மீன்பிடிகாரரிடம் பறிமுதல்

பம்பாய், ஜூலை 29

பம்பாயில் ஒரு மீன்பிடிகாரரிடம் ரூ. 6 லட்சம் பெறுமதியான அந்நிய நோட்டுக்கள் கலால் பகுதி [illegible]

# செக். தூதரகத்துக்கு முன்னால் செங்காவலர் ஆர்ப்பாட்டம்

பீகிங், ஜூலை 29

நேற்றுப் பீகிங்கில் அங்குள்ள செக்கோஸ்லோவாக்கியத் தூதரகத்துக்கு முன்னால் செங்காவலர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்குக் காரணம், சீனாவுக்கும் செக்கோஸ்லோவாக்கியாவுக்குமிடையேயான கலாச்சார ஒப்பந்தத்தைச் செக்கோஸ்லோவாக்கியா அத்துமீறிவிட்டதே என்று கூறப்பட்டது.

**தடை**

செக்கோஸ்லோவாக்கியா பல்கலைக் கழகங்களில், சீனப் பிரசாரத்தில் ஈடுபடும் சீன மாணவர்களுக்குச் செக்கோஸ்லோவாக்கியா தடை விதித்திருந்தது.

இதற்கெதிராகவோ சீனச் செங்காவலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**பிராக்கில் ஆட்சேபம்**

இந்த ஆர்ப்பாட்டத்தை ஆட்சேபித்து, பிராக்கில் உள்ள சீனத் தூதரகம் பொறுப்பதிகாரியிடம் ஓர் ஆட்சேபக் குறிப்பைச் செக்கோஸ்லோவாக்கியா அரசாங்கம் கையளித்தது.

அக்குறிப்பில், செக்கோஸ்லோவாக்கியத் தூதரகத்தின் முன்னால் செங்காவலர் ஆர்ப்பாட்டம் செய்ததையிட்டும், தூதரக அதிகாரிகள் அவமானப்படுத்தப்பட்டதையும் செக்கோஸ்லோவாக்கியா கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

# 4-வது விண்வெளிக் கலம்

வாஷிங்டன், ஜூலை 29

அமெரிக்கா, தனது நான்காவது மனிதரற்ற விண்வெளிக் கலத்தை வானவெளிக்கு அனுப்பியுள்ளது.

ஏற்கனவே, மூன்று விண்வெளிக் கப்பல்கள் பூமியைச் சுற்றி வலம் வருகின்றன.

சூரியனுக்கும், பூமிக்குமிடையேயுள்ள தொடர்பை ஆராயும் பொருட்டு அமெரிக்கா அனுப்பியுள்ள விண்வெளிக் கலத் தொடரில் நான்காவதாக அனுப்பப்பட்டுள்ள புதிய விண்வெளி கலமாகிய இது, மற்றைய மூன்று விண் வெளிக் கலங்கள் போல, முக்கியமான விஞ்ஞான விபரங்களைப் பூமிக்கு அனுப்பி வைக்கும்.

# புதிய போரில் ஈராக் ஈடுபடும்

### பிரதமர் கூறுகிறார்

பாக்தாத், ஜூலை 29

இழந்த அரபுப் பிரந்தியங்களை மீட்க ஈராக் புதிய ஒரு போரில் ஈடுபடுமென ஈராக் பிரதமர் இங்கு அறிவித்தார்.

ஈராக் நாடு முழுவதும் படை திரட்டப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் நாடு

# காங்கிரஸ் காரிய கமிட்டி

சென்னை, ஜூலை 29

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டி கூட்டம் ஓகஸ்ட் மாதம் 3-ம் திகதி நடைபெறும்.

காரிய கமிட்டி கூட்டம் 28-ந் திகதி நடைபெறுவதாக இருந்தது. காமராஜர் டில்லியில் தங்க வேண்டியிருந்தாலேயே, இக் கூட்டம் 3-ம் திகதி வரை தள்ளி வைக்கப்பட்டது.

# 8 மிஸோக்கர் கொல்லப்பட்டனர்

நாகாலாந்து, ஜூலை 29

கடந்தமூன்றுதினங்களாக இங்கு, பாதுகாப்புப் படையினருக்கும் மிஸோக் கலகக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்புகளில், 8 மிஸோக்கள் கொல்லப்பட்டனர்.

சில மிஸோக்களின் மறைவிடங்களை முற்றுகையிட்ட பாதுகாப்புப் படையினர், அங்கு பல ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் கைப்பற்றினர்.

# 'அமெரிக்கா நிறுத்தவேண்டும்'

வாஷிங்டன்,

வடவியட்னாம் மீதுகுண்டு வீசுவதை அமெரிக்கா நிபந்தனையின்றி நிறுத்த வேண்டுமென அமெரிக்க செனட்டர்கள் இருவர் கோரியுள்ளனர். இந்த இரு செனட்டர்களும் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனின் வியட்னாம் கொள்கையை ஆதரிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை பல்கலைக்கழக

# வைத்திய, பல்வைத்திய, பொறியியல் பிரவேச பரீட்சை முடிவுகள்

கொழும்பு, சனி

இலங்கை பல்கலைக்கழக, வைத்திய, பல் வைத்திய, பொறியியல்பகுதியில் சித்தியடைந்த தமிழ் மாணவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

வைத்தியப்பகுதி- கொழும்பு:

இஸ்பதான மகாவித்தியாலய [கொழும்பு] கே சபாநாதன்.

மகளிர்கல்லூரி கொழும்பு: செல்வி எம். சின்னையா, செல்வி வி. பு. காளிதாசன், செல்வி வி. வி. நாகேந்திரன்

விசாகா வித்தியாலய [கொழும்பு] செல்வி. ஏ. இராமநாதன்.

தனிபட்டவர்கள் [கொழும்பு]: வி. தெய்வேந்திரா, சி. ஞானகரன், எஸ். கமலாகரன், எம். நவரத்தினராசா, சி. சிவதாசன்.

வேம்படி மகளிர் கல்லூரி [யாழ்ப்பாணம்] செல்வி. வி. எம் கனகரத்தினம், செல்வி. ஆர். சங்கரப்பிள்ளை.

மத்தியகல்லூரி [யாழ்ப்பாணம்] என். ஏ. சுந்தரம்.

சென். ஜோன்ஸ் கல்லூரி [யாழ்ப்பாணம்] ஜி தம்பிப்பிள்ளை, வி. மனோகரன், சி. வை. ரி. முத்தையா, பி. நித்தியானந்தன்.

மகாஜனக்கல்லூரி[தெல்லிப்பழை]: செல்வி ரி கனகசபாபதி, செல்வி வி. நல்லையா, கே. அழகரத்தினம், எஸ் அருள்குமாரன், ரி. உமைபாலன்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி [சுன்னுகம்] எஸ். ஹிமாயகாந்தன்.

உடுவில் மகளிர் கல்லூரி: செல்வி ரி. துரைராசா.

ஹாட்லி கல்லூரி [பருத்தித்துறை] செல்விஎன். கனகசபை, செல்வி ஜே. பொன்னையா, கே. ஜெயபாலன், கே. மண்டலேசன் எஸ். பரமநாதன்.

தனிப்பட்டவர்கள் [யாழ்ப்பாணம்] ரி. சிவஞானம, ரி. சூரியபாலன், எஸ். சுந்தரலிங்கம், செல்வி எஸ். சபாரத்தினம்.

சென். தோமஸ் கல்லூரி [கல்கிசை] பி. என். பரமநாதன், ஆர். ஜி ராஜரத்தினம்.

பிறின்ஸ் வேல்ஸ் கல்லூரி [மொறட்டுவா] செல்வி ஆர். கந்தையா.

அக்குவனஸ் பல்கலைக்கழக கல்லூரி [கொழும்பு] ஈ. ஏ. பாலச்சந்திரன், ஜி. கனகரத்தினம், பி. மையுறுநாதன், எஸ். ஏ. மரியநாயகம், கே. நந்தபாலன், வி. நேமிநாதன், ஈ. பாக்கியநாதன், ஆர். ராஜகுமார், என். ராஜகுமாரன், எஸ். ஸ்ரீ கிருஷ்ணபால சூரியர், எஸ். சிறிதரன் ஆர். தில்லைநடராஜா, எஸ். கே. வல்லிபுரம், வி. விபுலானந்தன், செல்வி ஆர். குமாரசாமி, பி. வி. கந்தையா, செல்வி எம். பூபாலன், செல்வி எல். ராஜநாயகம், செல்வி எம். சேனுதிராசா, செல்வி பி. கந்தையா.

தேவிபாலிக்க மகாவித்தியாலயா [கொழும்பு]: செல்வி எஸ். முத்துத்தம்பி.

சென். பெனடிக்ற் கல்லூரி [கொழும்பு]: என். மயில்வாகன்.

றேயல் கல்லூரி [கொழும்பு]: எஸ். சம்பந்தன், எஸ். சோமசுந்தரம், ஏ. ஜே. தம்பாபிள்ளை.

பெம்றேக் அக்கடமி [கொழும்பு]: பி. மாணிக்கராசா, எஸ். சுந்தரலிங்கம், பி. சம்பந்தன்.

அலெக்ஸாந்திரா கல்லூரி [கொழும்பு]: கே. பாலசுப்பிரமணியம்.

**வைத்தியப்பகுதி பேராதனை**

ஸ்ரீ சுமங்கலா கல்லூரி [பாணந்துறை]: எ. பி. பதிராஜா.

கன்வெண்ட் [கொழும்பு]: செல்வி வை. முருகேசம்பிள்ளை, செல்வி எம். காத்திகேசர்.

மெதடிஸ்றி கல்லூரி [கொழும்பு]: செல்வி வி. தேவநேசம், செல்வி எஸ். ரி. தேவசகாயம்.

பெம்றேக்அகடமி [கொழும்பு]: எஸ். பாலசந்திரன்.

அக்குவனல், பல்கலைக்கழக கல்லூரி [கொழும்பு]: செல்வி பி. டி. எஸ். வேதநாயகம், செல்வி எம். பி. சங்கரலிங்கம், செல்வி எம். இராசநாயகம், ஏ ஜி. ரி. செபஸ்தியாம்பிள்ளை.

சென் தோமஸ் கல்லூரி [கல்கிசை] கே. பத்மநாதன்.

யாழ்ப்பாணகல்லூரி [வட்டுக்கோட்டை]: செல்வி கே. ராஜசிங்கம், செல்வி கே. சபாரத்தினம், கே. சிவராஜன்.

ஹாட்லி [பருத்தித்துறை]: செல்வி எஸ். விஸ்வநாதன், என். அருலிங்கம்.

மகாஜன கல்லூரி (தெல்லிப்பழை): வி. ஆனந்த நடேசன், செல்வி எஸ். கனகசபை, எஸ். சபாநாயகம், எப். எஸ். எஸ். எம்மனுவல், செல்வி எப். ஏ. திருச்செல்வம், செல்வி பி. கும்பிஜயா, செல்வி ஐ. பாலசிங்கம்.

சென் பற்றிக் [யாழ்ப்பாணம்]: சி. ஏ. பீறிஸ்

மத்திய கல்லூரி [யாழ்ப்பாணம்]: கே. சந்திர[illegible], எஸ். சபாநாதன், நாதர், கே. பி. மகேந்திரயோகம்.

கன்வென்ட் [யாழ்ப்பாணம்]: செல்வி ஆர். கனகரத்தினம்,

வேம்படி மகளிர் கல்லூரி [யாழ்ப்பாணம் : செல்வி சி. வைரமுத்து, செல்வி எஸ், சிவனடியான், செல்வி ஏ. ஆர், ராஜரத்தினம், செல்வி என். ஜேசுதாசன்.

ஸ்கந்தவரோதயா (சுன்னுகம்]: பி. திருவுதயன். கே, எஸ். ஜெயமனோகரா, ரி, எஸ். பாலசுப்பிரமணியம்.

இந்துக் கல்லூரி [மானிப்பாய்]; என். டபிள்யு விஜயபாலன்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி[யாழ்ப்பாணம்] செல்வி எல், இரத்தினம், செல்வி என். கனகசிங்கம்.

சென் ஜோன்ஸ் கல்லூரி [யாழ்ப்பாணம்[ ரி. டி. எஸ். சோமநாதர், ஈ. ஏ. ஜெயசீலன், கே. ஜே. சுதாகன், கே. அம்பிகைபாகன்.

இந்துக்கல்லூரி [யாழ்ப்பாணம்) எம். ஸ்ரீ கணேசன், எஸ். சண்முகலிங்கம், எஸ். ஞானசுந்தரம்,

தனிப்பட்டவர்கள் [கொழும்பு] என். வி. நவரத்தினசிங்கம், டபிள்யூ. ரி: மகேஸ்வரன், வி. டபிள்யூ அருளானந்தம்.

தனிப்பட்டவர்கள்(யாழ்ப்பாணம்) ஆர். எம். குழந்தைவேலு, செல்வி எம். சிதம்பரப்பிள்ளை செல்வி கே. தளையசிங்கம்.

தனிப்பட்டவர்கள் [வட்டுக்கோட்டை] பி. பாலகிருஷ்ணன்.

பல்வைத்தியப் பகுதி

அக்குவனஸ் பல்கலைக் கழகக் கல்லூரி [கொழும்பு] செல்வி கே. சின்னத்துரை, செல்வி என். வைத்திலிங்கம்.

பெம்றேக் அகடமி [கொழும்பு] எஸ். நரேந்திரன்.

ஹாட்லி கல்லூரி [பருத்தித்துறை] ஏ. சண்முகவடிவேல், ஏ. சிவசிதம்பரம்.

மெதடிஸ் கல்லூரி [கொழும்பு] செல்வி கே. அருளம்பலம்

இந்துக்கல்லூரி [மானிப்பாய்] என். மகேசன் வேம்படி மகளிர் கல்லூரி[யாழ்ப்பாணம்] செல்வி ரி. சுப்பிரமணியம்.

கோட்டைமுனை மகாவித்தியாலயம் [மட்டக்களப்பு) செல்வி எஸ் யோகேந்திரநாதன்.

பொறியியல்

அக்குவனஸ் பல்கலைக்கழகம் [கொழும்பு] ஆர். எஸ். தில்லைநாதன்.

இந்துக்கல்லூரி(கொழும்பு) செல்வி என். கருணநிதி என். அசோகன்.

சென் யோசப் கல்லூரி (கொழும்பு) எல். ஜே. அரியநாயகம்.

றேயல்கல்லூரி(கொழும்பு) ஆர். பாலசுப்பிரமணியம். வி. ஏ. ஞானேஸ்வரன், சி. கிருஷ்ணராஜன் ரி. ஆர். குலேந்திர சிங்கர், எஸ் ஸ்ரீரங்கநாதன், வி. விஜயநாயகம் சென் தோமஸ் [கல்கிசை] டி. ஏ பொன்னையா, எம். ஆர். ஆர். கூல்.

சென் பீற்றர்(கொழும்பு) ஈ. மூர்த்தி.

பெம்றேக் அகடமி [கொழும்பு] குலசிங்கமணி.

தனிப்பட்டவர்கள் [கொழும்பு] எம். தனேந்திரன் கோட்டைமுனை மகாவித்தியாலய [மட்டக்களப்பு] கே, வடிவேல்.

சிவானந்த வித்தியாலய மட்டக்களப்பு] என், நாகரத்தினம் எஸ். விஜயகுமார்

இந்துக்கல்லூரி (யாழ்ப்பாணம்) கே. அமிர்தநாதன், [illegible] திரா, கே. சந்திரகுமாரன், எஸ். பஞ்சலிங்கம், பி. சச்சிதீஸ்வரன், பி. செந்தூரார், ஆர். சண்முகநாதன், எஸ். சிவபாலகன், ஆர். ஸ்ரீகாந்தன், ஜி. ஸ்ரீகாந்தன். எம். தேவகுமாரன், கே. விஜயரத்தினம்,

ஸ்ரீ சோமாஸ்கந்தா (புத்தூர்) கே. பாலகிருஷ்ணர், ரி. பாலசுப்பிரமணியம்.

இந்துக்கல்லூரி (கொக்குவில்) வி. சண்முகநாதன், கே. வாமதேவா.

வேம்படி மகளிர் கல்லூரி (யாழ்ப்பாணம்) செல்வி கே, கந்தையா.

வைத்தீஸ்வர வித்தியாலயம் (யாழ்ப்பாணம்) எஸ். மார்க்கண்டு.

மத்தியகல்லூரி (யாழ்ப்பாணம்) கே. குகநேசராசா, கே. சுகுமாரன், எஸ். ஐ. சிறீதரன், ஏ. விக்னராஜா.

சென் ஜோன்ஸ்(யாழ்ப்பாணம்) பி. கருணகரன், ஆர். மகில்ராஜன், கே. மணிவாசகன், எம். சேகர், சி. சிவாநந்திரன்.

சென். பற்றிக் கல்லூரி (யாழ்ப்பாணம்) ஜே. ஜே. பேர்னுட், எஸ். ஐ. ஆர். கூறுஸ், ஜே. எல். ஹையினல், ஜே. எக்ஸ். பிலிப்புபிள்ளை.

இந்துக்கல்லூரி (மானிப்பாய்) எம். யோகேந்திரன், ஏ. ஞானேந்திரன், எம். ஜெகதீசன், ஜி. ராமச்சந்திரன், ஏ. சிறிகாந்தா.

மகாஜனக் கல்லூரி (தெல்லிப்பழை) எஸ். சந்தனசிதம்பரநாதன்.

ஸ்கந்தவரோதயா (சுன்னுகம்) எஸ். சரவணபவான், எஸ். சிறிகாந்தன், ஆர். சுந்தரமூர்த்தி.

ஹாட்லிக்கல்லூரி (பருத்தித்துறை) என். பத்மநாதன், பி சச்சிதானந்தன்.

சிதம்பராக்கல்லூரி (வல்வெட்டித்துறை) ஏ. ராஜலிங்கம்.

அமெரிக்கன் மிஷன் கல்லூரி (உடுப்பிட்டி பி. மாணிக்கவாசகர். பி, ராஜேந்திரன்.

யாழ்ப்பாணக்கல்லூரி (வட்டுக்கோட்டை) ரி. பாலதேவன், எஸ். ஜே. கிறிஸ்தோபர், எஸ். ராஜநாயகம், ரி. ஸ்கந்தராஜா, எஸ். சிவகுமாரன், எம். செல்லையா,

தனிப்பட்டவர்கள் யாழ்ப்பாணம்) கே. விஞயசுமூர்த்தி, ஜே. பைரவபிள்ளை.

தனிப்பட்டவர்கள் (மட்டக்களப்பு) எம். விஜயகுமார்.

தனிப்பட்டவர்கள் (திருக்கோணமலை) ரி. எஸ். குணச்சந்திரன், ஜே. ஆர். செல்வநாயம்.

# கொடிகாமம் கொலைவழக்கு சுப்பிரீம் கோர்ட்டிற்குப்பாரம்

சாவகச்சேரி, சனி

கொடிகாமம் கொலை வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா விசாரணை முடிவில் சாட்சியங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்த பின் ஜூரிகள் அடங்கிய சுப்ரீம்கோர்ட் நீதிபதி முன் விசாரணை செய்வதற்கு வழக்கைப் பாரப்படுத்துவதாகக் கூறி சுப்ரீம்கோர்ட்டிற்கு வாழ்க்கைப் பாரப்படுத்தினர்''.

இவ்வழக்கில் இவ்வருடம் ஏப்ரல் 17-ந் திகதி கொடிகாமத்தில் 40 வயதான கணபதி நாகமுத்து என்பரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த சண்முகம் வல்லிபுரம் என்பவர் மீது குற்றம் சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் புரக்டர் வி. செல்லத்தம்பியும் வழக்காளி தரப்பில் சாவகச்சேரிப் பொலிசாரும் ஆஜராஞர்கள்.

## ஹொங்கொங்கில் புதிய சட்டங்கள்

ஹொங்கொங், ஜூலை 29

ஹொங்கொங்கிலுள்ள இடதுசாரிச் சீனரின் ஆர்ப்பாட்டங்களையும், கலவரங்களையும் கட்டுப் படுத்தும் நோக்கத்துடன் ஹொங்கொங்கில் மேலும் சில அவசரகாலச் சட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

புதிய சட்டங்களின் மூலம், விசாரணையின்றி எவரையும் ஒரு வருடம் வரை சிறையிலிடலாம்.

இதுவரை, 1000-க்குமதிகமானோர் ஹொங்கொங் கலவரங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## நைஜீரியாவில் சண்டை

லாகோஸ், ஜூலை 29


சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற கிழக்கு நைஜீரியத் துருப்புகள், 'ஷெல்' எண்ணைக் கம்பனியைச் சுற்றி வளைத்துள்ளன.


"ராணு"

உங்கள் சொகுசுக்கேற்ற

சாமான்கள்

ஸ்பிரிங் கட்டில் பிரேம்கள், எல்லா அளவிலும்



- டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- டிலைட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- ஆஸ்பத்திரி கட்டில்கள்
- டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
- ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
- பஞ்சு - தும்புமெத்தைகள்
- ஸ்பிரிங் மெத்தைகள்
- குழந்தை தொட்டில்
- மெத்தை ஸ்பிரிங்குகள்
- திரைகள்
- சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்ட விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

த பர்மா டீக ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,

12, புளுமெண்டால் றேட்,

கொழும்பு-13.

தொலைபேசி: 2233/34



ராதா மணிமார்க்

சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்

(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனுதி வகை இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

3, கே. கே. எஸ். றேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம

அரசாங்க விளம்பரம்
காங்கேசன்துறைப் பட்டின
சபையை நகர சபையாகத்
தரமுயர்த்தல்.

என் 2146 - 13-7-67 அரசாங்க வர்த்தமானியிலும் 12-7-67-ம் திகதி பத்திரிகை பிரசுரங்களிலும் மேற்படி விடயம் பற்றி பிரசுரிக்கப்பட்ட அறிக்கை சார்பாக ஆணைக்குழு 6-8-67 தொடக்கம் 11-8-67 வரையும் தினமும் காலை 9-00 மணியிலிருந்து 12 மணி வரையிலும் காங்கேசன்துறைப்பட்டினசபைக் கந்தோரில் நேர்முகச் சாட்சியம் பதிவு செய்துகொள்ளும்.

இவ்விடயத்தில் சிரத்தை எடுத்து ஆணைக்குழுவின் முன் நேர்முகச் சாட்சியம் கூற விரும்புவோர் யாவரும் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. எம். ஏ. அப்துல்மஜீத் அவர்களுடன் கீழ்க்காணும் விலாசத்துக்குக் கடிதமூலம் தொடர்பு கொண்டு முன்னேற்கனவே சாட்சியம் அளிப்பதற்கு நேரகால நியமனம் பெற்றுக்கொள்ளவும்.

ஆணைக் குழுவின்
கட்டளைப்படி,
மு. அ. அப்துல்மஜீத்,
செயலாளர்,
காங்கேசன்துறைப்
பட்டின சபையை
நகரசபையாகத்
தரமுயர்த்தும்
ஆணைக்குழு.
உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.

4168 GP

அரசாங்க கேள்விகள்
வவனியா கச்சேரி
என் 2050 - வவுனியா மாவட்டத்தில் கட்டிட வேலைகள்.

சுகாதாரப் பகுதி
என் 2047 - 1967/68-ம் ஆண்டிற்கு வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கு பசும்பால் விநியோகம் செய்தல். கேள்விகள் முடிவு திகதி 13-8-67

இதன் முழு விபரங்களுக்கும் 28-7-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உபதபா கந்தோர்களிலும், புகையிரத நிலயங்களிலும் பார்வையிடலாம்.

G.P. 4156

### புங்குடுதீவு
## கல்வி வளர்ச்சி கழக சேவை

புங்குடுதீவு. சனி

புங்குடுதீவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான விஞ்ஞான, வர்த்தக, புவியியல் உபகரணங்களையும் நூல்களையும் புங்குடுதீவு கல்விவளர்ச்சிச் சபை வழங்கியுள்ளதாக கழகச்செயலாளலர் சு. யோ. பூராசா தெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### ஞாயிறு 30-7-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள 7-20 தினககுறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எமது அதிதி.

இரவு 6-15 கிராமியப் பாடல்கள், 6-30 கிறீஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு— சிறிதேவி, பத்மநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம்,


## இப்பொழுது திரையிடப்படுகிறது

| | |
|---|---|
| லிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | காமினி [மருதானை] |
| ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை] |

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த





ஏவி எம். புரொடக்ஷன்ஸ்

# அன்பே வா

(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன்


# வரணி மகாவித்தியாலய இல்லப் போட்டி முடிவுகள்

வரணி, சனி

வரணி மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி சாவகச்சேரி எம்பி திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரிப் பகுதி வித்தியாதரிசி திரு. எம். குணரத்தினம் பாடசாலைக் கொடியேற்றி வைத்து போட்டியை ஆரம்பித்துவைத்தார். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம்கலந்துகொண்டார். திருமதி சபாரத்தினம் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார். கல்லூரி அதிபர் திரு. வ. தங்கராசா வரவேற்புரைநிகழ்த்தினார்.

பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்த 'டம்பெல்ஸ் டிரில்' என்னும் நிகழ்ச்சியில் பயிற்சியளித்த சங்கீத ஆசிரியையான செல்வி ஞானம்பிகை முருகேசுவை, மேலதிக அரசாங்க அதிபர் பாராட்டினார். போட்டி முடிவுகளில் சில வருமாறு:

மேற்பிரிவு ஆண்கள்— 100 யார் ஓட்டம்: சு. சின்னக்குட்டி, பாண்டியன் இல்லம், சி.மார்க்கண்டு, சேரன் இல்லம், சி. கணபதிப்பிள்ளை பாண்டியன் இல்லம்.

220 யார் ஓட்டம்— சி. கணபதிப்பிள்ளை [பா], சி. சின்னத்துரை [சோழன் இல்லம்], சி. மார்க்கண்டு [சே].

440 யார் ஓட்டம்— க. கந்தராசசிங்கம் [சே], சு. சின்னக்குட்டி [பா], க. செசல்வராசா [சே].

880 யார் ஓட்டம்— சி. சின்னத்துரை [சோ], வ. திவ்வியராசா [பா], மா. வேலுப்பிள்ளை (சே).

1 மைல் ஓட்டம்— சு. தருமலிங்கம் (பா), வ.திவ்யராசா (பா), க. இராமச்கந்திரன் (பா).

மத்தியபிரிவு ஆண்கள் 100 யார் ஓட்டம்— மு. செல்லத்துரை [சோ], நா. இராசதுரை (சே], தா. வேலுப்பிள்ளை [பா].

220 யார் ஓட்டம்— மு. செல்லத்துரை (சோ], நா. இராசமுரை (சே), சி. கந்தசாமி [பா].

440 யார் ஓட்டம்— வ. இராசரத்தினம் [சோ), தா. வேலுப்பிள்ளை ]பா], நா. முருகேசு (பா).

880 யார் ஓட்டம்— வ. இராசரத்தினம் [சோ], சு. சண்முகநாதன் (சே], வே. கணபதிப்பிள்ளை [பா].

கீழ்ப்பிரிவு ஆண்கள் 100 யார் ஓட்டம்— செ. தேவபாலன் (சோ], க. வேலுப்பிள்ளை [சோ), செ. கந்தையா [சே].

220 யார் ஓட்டம்— செ. தேவபாலன் [சோ], செ. சிவசுப்பிரமணியம் [சோ], சி. இராசரத்தினம் [பா].

கீழ்ப்பிரிவு பெண்கள் 100 யார் ஓட்டம்— க. தங்கராணி [சே], கா. சரஸ்வதி [பா], பொ. இந்திரவதனு [பா].

மத்தியபிரிவு பெண்கள் 100 யார் ஓட்டம்— க.தவமணிதேவி [பா], கு. புனிதவதி [சே], ச. கெங்காதேவி [பா].

மேற்பிரிவு பெண்கள் 100 யார் ஓட்டம்— மு. கதிராசிப்பிள்ளை [சே), க. புவனேஸ்வரி [சோ], மு. இராசேஸ்வரி [சே].

சாம்பியன்கள்— கீழ்ப்பிரிவு ஆண்— எஸ். தேவபாலன் [சோ], மத்திய பிரிவு ஆண்- எம். செல்வத்துரை, வி. இராசரத்தினம் சோ, மேற்பிரிவுஆண்- எஸ். தருமலிங்கம் [பா], எஸ். சின்னக்குட்டி [பா], கீழ்ப்பிரிவு பெண்- கே. தங்கராணி [சே], மத்தியபிரிவு பெண்- கே. இராஜேஸ்வரி (பா), மேற்பிரிவு பெண்- எம். கதிராசிப்பிள்ளை [சே].

பாண்டியன் இல்லம் முதலாவதாகவும், சோழன் இல்லம் இரண்டாவதாகவும், சேரன்இல்லம் மூன்றுவதாகவும் வந்தன.

## புகார்

கோப்பாய், சனி

கோப்பாய் சந்தியிலிருந்து கல்வியங்காடு வரை பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதிகளில் பஸ் நிற்பாட்டும் இடங்கள் குறிக்கப்படவில்லை. இதனால் பஸ் பிரயாணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர். இது குறித்து பொதுமக்கள் பலர் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவரிடம் புகார் செய்துள்ளார்கள். முன்பு தெருவோரங்களில் குறிக்கப்பட்டிருந்த அடையாளங்கள் அழிந்துவிட்டன.

## நேரில் பார்வையிட்டார்

அனலைதீவு, சனி

அனலைதீவுப் பாடசாலைகளை யாழ். மாவட்ட வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் நேரிற்சென்று பார்வையிட்டார். அங்குள்ள குறைகளை நேரிற் பார்வையிடும்படி அனலைதீவு சதாசிவ ஆங்கிலப்பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கமும், அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினரும் எடுத்துக்கொண்ட முயற்சியால் நேரில் பார்வையிட்ட, வித்தியாதிபதி அங்குள்ள குறைகளை விரைவில் தீர்க்க ஆவனசெய்வதாகக் கூறியுள்ளார்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
சேபரயாதினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
பலாஜி ஜெயஸ்ரீ
நடித்த
தெய்வ பலம்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
பாக்கியவதி

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Rod Taylor - Doris Day
in
GLASS
BOTTOM BOAT
[Cinemascope - Color]


## வரிவிளம்பரம

மனேச்சர் தேவை

கட்டைவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு க. பொ. த. பத்திரத்தில் சித்தியும், கூட்டுறவுப் பயிற்சி உடையவராயும், பிணை ரொக்கம் ரூபா 1000/-ம். ஆதனப்பிணை 5000/-ம் கட்டக்கூடியவராவும் இருக்க வேண்டும். மாதவேதனம் ரூபா 115/- தொடக்கம் ரூபா 150/- வரை கொடுக்கப்படும். 5-8-67-க்கு முன் தலைவருக்கு விண்ணப்பிக்கவும். விலாசம் கட்டைவேலி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி. சா. வி. பொன்னையா, தலைவர். 2515

கார்

நல்ல நிலைமையிலுள்ள ஆஸ்டின் கேம்பிரிஜ் கார் (A 50) உடன் விற்பனைக்குண்டு. 332, நாவலர் ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 2452

வீடு

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக் கருகாமையில் 3 பரப்புக் காணியில் கல்வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- க. பத்மநாபன், 108, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 2516

## இளைஞன் பரிதாப மரணம்

கிளிநொச்சி, சனி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ரவீந்திரன்[19]என்னும் இளைஞன் இன்று அதிகாலை யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த கொழும்பு மெயில்வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் வீழ்ந்து உடல் துண்டிக்கப்பட்டு மரணமான பரிதாப சம்பவம் ஓமந்தை புகையிரதநிலயத்திலிருந்து இரண்டுமைல்களுக்கப்பாலுள்ள இடத்தில் நிகழ்ந்துள்ளது.

வவனியா பொலிசார் இதுசம்பந்தமாக விசாரணை செய்துவருகின்றனர்.

## எதிரி விடுதலை

சாவகச்சேரி, வெள்ளி

கிளிநொச்சியில் மின்சாரக் கம்பம் ஒன்றுடன் மோதிச் சேதம் விளைவித்ததான வழக்கில் இராணுவ ஜீப் சாரதியான டபிள்யு. பெர்னுன்டோ என்பவர் விசாரணை முடிவில் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசாவினுல் விடுதலை செய்யப்பட்டார்.


## கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை - நவம்பர் 1967

வடமாகாண ஆசிரியர் சங்கத்தினுல் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 10-9-67 க்கு முன்பாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 31-8-67க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ் உள்ள விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைச் சபை உத்தியோகத்தர்கள்:

தலைவர்: திரு. இ.சபாலிங்கம்,
யாழ்ப்பாணம். மத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

காரியதரிசி: திரு. அ. ச. குமாரசுவாமி,
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

உபகாரியதரிசி: திரு. ந. சச்சிதானந்தன்
ஞானசாரியக் கல்லூரி, கரவெட்டி.

அ. ச. குமாரசுவாமி,
காரியதரிசி
வ. மா. ஆ. ச
பரீட்சைச் சபை

'சிவன் வாசம்'
குருபூசை மடாலய வீதி,
நீர்வேலி.
27-7-67

40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நடிகர்களை பாகுபாடுகாட்டி நோக்குவது நல்லதல்ல'

## யாழ்ப்பாணத்தில் ஜெமினி சாவித்திரி

யாழ்ப்பாணம், சனி

'கலை' என்ற சொல் அபூர்வமானதொன்று. இது இன மதவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இலங்கைநடிகரென்றோ இந்திய நடிகரென்றோ நடிகர்களைப் பாகுபாடு காட்டி நோக்குவது கலைத்துறைக்கு அவ்வளவு ஊக்கமளிப்பதாக இருக்காது. ஒரு நடிகன் ஏதாவதொரு கட்சியைச் சார்ந்தவனாக இருக்கலாம். ஆனால் அந்த கட்சிக் கண்ணோட்டத்தோடுகுறிப்பிட்ட நடிகனின் நடிப்பைஎடைபோடக் கூடாது. ஒரு வித பொது நோக்கு இருந்தால் தான் கலை தனக்குரிய தனித்தன்மையோடு வளரும்.''

நேற்று மாலை 6 மணிக்கு விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பிரபல தென்னிந்திய நட்சத்திரங்களான ஜெமினி கணேசனும் சாவித்திரியும் பத்திரிகைநிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பலாலி விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் இவர்களைப் பார்ப்பதற்காக அங்கு வந்திருந்தார்கள்.

இலங்கையில் ஸ்ரீமாத்தா பிலிம்ஸார் தயாரிக்கவிருக்கும்படமொன்றைடைரக்ட் செய்வதற்குத் தாம் விரைவில் இலங்கைக்கு வரவிருப்பதாக நடிகையர் திலகம் சாவித்திரி தெரிவித்தார்.

தாம் பல தடவை இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்தபோதிலும் தானும் சாவித்திரியும் ஜோடியாக இப்போதுதான் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்திருப்பதாக ஜெமினி கணேசன் குறிப்பிட்டார். தாங்கள் விரைவில் ஒருபடம் தயாரிக்க இருப்பதாகவும் ஜெமினி கணேசன் தெரிவித்தார்.

மன்னார், கொழும்பு, கதிர்காமம், கண்டி, நுவரெலியா, ஆகிய இடங்களுக்கும் சென்ற பின்னர் அடுத்த மாதம்3-ம் திகதி இவர்கள் இந்தியா புறப்படுவார்கள். ஜெமினி கணேசனின் காரியதரிசியான திரு. மகாலிங்கமும் இவர்களுடன் வந்திருக்கிறார். [ந. நி.]

---

உலகு

## அரிசி உற்பத்தி குறைந்துள்ளது

நியூயோர்க், ஜூலை. 28

உலகில் 1966-67ம் வருடத்துக்கான அரிசி உற்பத்தி முன்னர் மதிப்பிடப்பட்டிருந்ததைவிடக் குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தி சம்பந்தமான அமெரிக்கவெளிநாட்டு அறிக்கையொன்றிலேயே இவ்வித தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

உலகின் அரிசி உற்பத்தியில் 93 சதவீதமான அரிசியை ஆசியநாடுகளே உற்பத்தி செய்வதாகவும் இந்த நாடுகளில் சிலவற்றில் ஏற்பட்ட வரட்சி, வெள்ளம் ஆகியன காரணமாக அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் அரிசி உற்பத்தி வரட்சி, வெள்ளம் ஆகியவற்றால் வெகுவாகப் பாதிக்கப்பட்டதாகவும் அறிக்கை கூறுகிறது.

---

## உலகயுத்தத்துக்கு வியட்னும் வழி கோலுகிறது

### அமெரிக்காவுக்கு ரஷ்யா, சீனா எச்சரிக்கை

சைகோன், ஜூலை 28

வடக்கு-தெற்குவியட்னாமுக்கிடையிலுள்ள இராணுவ சூன்யப்பிரதேசத்தில் அமெரிக்க கடற்படை எல்லை தாண்டிச் சென்றுள்ளது உலக யுத்தத்தைத்தோற்றுவிக்கக்கூடிய ஒரு செயல் என வடக்கு வியட்னாமும் ரஷ்யா சீனா ஆகிய நாடுகளும் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன:

இந்தப் பிரதேசம் இராணுவ சூன்யப்பிரதேசம் என ஐ. நா.வினால் தெரிவிக்கப்பட்டிருந்தும் அமெரிக்கா எல்லைமீறிச்சென்றுள்ளது அமைதியைப் புறக்கணிக்கும் செயலென இந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தாம் அடைந்துள்ள பிரதேசத்தில் சிறு பீரங்கிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதிகளில் கம்யூனிஸ்டுகளை அகற்றும் நடவடிக்கையாகவே தாம் இப்பகுதியை அடைந்துள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதற்கிடையே வியட்னும் போரில் அமெரிக்கா 600 விமானங்களை இதுவரை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூலை மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### கிராமசபை தலைவர்கள்

கோப்பாய், வெள்ளி

நீர்வேலி கிராமசபையின் புதிய தலைவராக 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஆர். அப்பாத்துரை தெரிவுசெய்யப்பட்டார் உபதலைவராக புதிய தலைவரை எதிர்த்துப்போட்டியிட்ட முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. நடராசா தெரிவு செய்யப்பட்டார்.

ஃ ஃ ஃ

கோப்பாய் கிராமசபைக்கான உபதலைவர் தெரிவில் திரு. ஏ. காசிப்பிள்ளை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

---

### வவனியாவில் 'ஒலிமபிக்தீபம'

வவனியா, சனி

வவனியா மகாவித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையேயானவருடாந்த விளையாட்டுப்போட்டியில் 3இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் பாரதிஇல்லம் முதலிடத்தைப் பெற்றது. மற்றும் புகழேந்தி இல்லம் 2வதாகவும், இளங்கோ இல்லம் 3வதாகவும் வந்தன.

ஆண்கள் போட்டியில் கீழ்ப்பிரிவில் வி. புஷ்ப நாதனும், மத்திய பிரிவில எஸ், அரசரத்தினம், என் யோகராசா ஆகியோரும், மேற் பிரிவில் ஈ. செல்வராசாவும், பெண்கள் போட்டியில்கீழ்ப் பிரிவில் பி. பால குமாரியும், மத்திய பிரிவில் எஸ். வசந்தாதேவியும், மேற்பிரிவில் ஜி. சாந்தமும் சாம்பியன்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்..

மேற்படி கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கு வித்தியாதிகாரி திரு. சி. ஏ. ஞானசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

இப்போட்டியின் பலபுதிய சாதனைகள் பின்வருமாறு:- மேற்பிரிவு ஆண்கள்: தடியூன்றிப்பாய்தல்: ஆர். சண்முகம் [8'3'']800யார் ஓட்டம்: சி. செல்வராசா [2.19 செக்] மத்தியபிரிவு ஆண்கள் தடியூன்றிப்பாய்தல்: எஸ். அரசரத்தினம்[7'8'']நீளம் பாய்தல்: என். யோகராசா[16' 6'']கெந்திப்பாய்தல்: எஸ். அரசரத்தினம் (35'.8'') கீழ்ப்பிரிவுஆண்கள்100யார் ஓட்டம்: வி. புஷ்பநாதன்; 14, 8செக் ], உயரம்பாய்தல்: ரி துரையேசு[4'.3''], மேற்பிரிவுபெண்கள்100யார் ஓட்டம்: ஜி. சாந்தம்[14.2செக்], 200யார் ஓட்டம்: ஜி. சாந்தம்[29.3செக்], நீளம் பாய்தல்: ஜி. சாந்தம் [15'], கீழ்ப்பிரிவு பெண்கள்80யார் ஓட்டம்: பி. பாலகுமாரி [12.3 செக்], 100யார் ஓட்டம்: பி, பாலகுமாரி [15.5செக்]

ஒலிம்பிக் முறைப்படி போட்டிகள்நடைபெற்றன,

வவனியா எம். பி. யின்இல்லத்தில் தீபம் ஏற்றபட்டுதீபத்துடன் எம். பி. யின் செய்தியையும்தாங்கியவாறுசைக்கிளில் ஊர்வலம் வந்து விளையாட்டுகள் ஆரம்பிக்கப்பட்டன.

---

### கயரேகத்தடுப்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர்கள் இதற்குத் தேவைப்படுகின்றார்கள். இது ஒரு சமூகசேவையாகும். பலன் கருதாதுநாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் இத்தொண்டர் படையில் சேர்ந்து முழுமூச்சுடன் கயரோகத்தைத் தடுப்பதில் ஈடுபட்டால் இன்னும் சில வருடங்களில் கயரோகம் அறவே ஒழிந்துவிடக்கூடும்.

மேற்கண்டவாறு இலங்கைக் கயரோக தடுப்புநிவாரண சங்கற்தின் ஆதரவில் நயைபெற்ற மகாநாட்டின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா குறிப்பிட்டார். யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டுக்கு இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 200 க்கும் மேற்பட்ட கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகள் சமுகம் கொடுத்திருந்தனர்.

மாவட்டந் தோறும்அமைக்கப்படும் கயரோக தடுப்பு நிவாரண சங்கத்தின் கிளைக்ளும் அவற்றின் சேவைகளும் பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் வலிகாமம் மேற்குக் கிளைச்சங்கத் தலைவர் டாக்டர் கே. சிவஞான

---

## 'அறியாமையால் காசநோய் பரவுகிறது'

யாழ்ப்பாணம், சனி

இலங்கையைப் பொறுத்த அளவில் கயரோக நோய் ஒரு பெரும்பிரச்னை. இலங்கையில்தற்பொழுது 66,000 பதிவுசெய்யப்பட்ட கயரோகிகள் இருக்கிறார்கள். அரசாங்கம் நாட்டிலுள்ள சகல கயரோகிகளுக்கும் தக்க கிசிச்சை அளித்துவருகிறது. கயரோகத் தடுப்பு நடவடிக்கைகள் இலங்கை முழுவதிலும் தீவிரமாக நடைபெறுகின்றது. இதன் பயனாக கயரோகத்தினால், பீடிக்கப்பட்டவர்களின் தொகையும் அதனால்இறப்பவர்களின் தொகையும் குறைந்திருக்கின்றது. இவ்வளவு தடுப்பு முறைகளைக் கையாண்ட போதிலும் இந் நோயினால் பீடிக்கப்பட்ட பலர் மறைமுகமாக சமூகத்தில் நடமாடி நோயைப் பரப்புவதற்கு வழிவகுக்கிறார்கள். இது பெரும்பாலும் அறியாமையினாலும் சோம்பலினாலும் ஏற்படுகின்றது. இங்குதான் கயரோக எதிர்ப்பு தொண்டர்களின் உதவி மிகவும் உபயோகமாகின்றது. வடமேற்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் வாரத்துக்கு இருதடவை சிகிச்சை அளிக்கும் ஒரு திட்டத்தை நாம் புகுத்தியுள்ளோம்.''

இவ்வாறு நேற்றுக் காலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்ற கயரோகத் தடுப்பு நிவாரண சங்கத்தின் மகாநாட்டில் சிறப்புரை நிகழ்த்திய சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன குறிப்பிட்டார். இம்மகா நாட்டிற்கு நாட்டின் பல பகுதிகளிலுமுள்ளகிளைச்சங்கப்பிரதிநிதிகளும், டாக்டர்களும் சமூகமளித்திருந்தனர்.

வடபகுதிஅரசாங்க அதிபரும் கயரோக தடுப்பு நிவாரண சபையின் வடபகுதித் தலைவருமான திரு. வேர்ணன் அபயசேகரா மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார்.

---

## சம்பள, பதவிஉயர்வை பெற மந்திரியை எம்.பி. சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'சிங்கள தேர்ச்சியின்மை காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளசம்பள உயர்வு பதவி உயர்வு ஆகியவற்றை தபால் தந்தி ஊழியர்களுக்கு மீண்டும் வழங்க தபால் பகுதி மந்திரியை சந்தித்து நடவடிக்கை எடுப்பேன்.'

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்க யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த தூதுகோஷ்டியிடம் யாழ்ப்பாணம் எம் பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

நேற்றுக்காலை இத்தூதுகோஷ்டியினர் யாழ்ப்பாண எம். பி.யை பேட்டி கண்டபோது 1956-ம்ஆண்டுக்குப் பின் சேர்ந்தவர்களுக்கு சிங்கள பரீட்சையில் சித்தி பெறவேண்டுமென்ற நிபந்தனை இருப்பதாகவும் இடமாற்றத்திற்கு உட்படாத தங்களுக்கு சிங்கள தேர்ச்சி அவசியமில்லையென்றும் தெரிவித்தனர்.

1956-ம்ஆண்டிற்குமுன்பு இருந்த முறைப்படி தங்களுக்கு சம்பள உயர்வும் பதவி உயர்வும் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

கண்டி, கொழும்பு நகரில் உள்ளதுபோல், வடபகுதியிலும் பஸ்களில் தபால் பைகளைக் கொண்டு செல்லும் முறையை மாற்றி தபால்பகுதி வான்கள்மூலம் அவற்றைக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கும்படியும் கோஷ்டி கேட்டுக் கொண்டது. பஸ்களில் தபால்பைகளை கொண்டு செல்வதால் தபால் பகுதி ஊழியர்களுக்கு அதிக சிரமமிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

---

### வடககு....

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தறிச்சேலைகள், சிறுவர்களுக்கான வண்ணச்சட்டைகள், பனை ஓலையால் செய்யப்பட்ட கலைமிளிரும் பாவனைக்குரிய பலவித பொருள்கள், கயிற்றினால்இழைக்கப்பட்ட பாய்கள், செம்பினாலும் பித்தளையினாலும் உருவாக்கப்பட்ட திருவுருவங்கள், விளக்குகள் மண்ணால் செய்யப்பட்ட அழகுப் பொம்மைகள் எல்லாம் அழகின் கதை கூறி வரவேற்கின்றன.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை நேரில் பார்க்கமுடியாதவர்களுக்கு அந்தத் தொழிற்சாலையைப் போன்ற ஒரு சிறிய தொழிற்சாலையைப் பார்க்கும் வாய்ப்பை காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுறவு ஸ்தாபனத்தார் இங்கு ஏற்படுத்தியுள்ளனர். சிமெந்தாலான பூச்சட்டிகள் ஆசனங்கள் இவற்றை வாங்க விரும்புபவர்கள் இங்கு வாங்கிக்கொள்ளலாம். விரும்பிய இடத்துக்கு கொண்டுசெல்லக்கூடிய மலசலகூடமும் உண்டு.

இன்னும் பல வர்த்தகஸ்தாபனங்களின் நவீன பொருட்கள் கொண்ட நிலையங்கள் வெளிநாட்டுத் தூதரகங்களின் காட்சி நிலையங்கள் எல்லாவற்றையும் விவசாயக் கைத்தொழில் பொருட்காட்சிக்குச் செல்பவர்கள் காணலாம்.

இசை, நடன கலைநிகழ்ச்சிகளில் ஈடுபாடுகொண்டவர்கள் இன்புறவும் இங்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகள் உழைப்பு இது

கண்ணுக்குக் குளிர்ச்சி, கருத்தில் ஒரு புதிய உற்சாகம் தரும் யாழ். விவசாய கைத்தொழில் பொருட்காட்சி விவசாயிகளின் உழைப்பின பலர் அறியவைக்கும் ஒரு அழகுக் காட்சியாக அமைந்துள்ளது. நமது நாட்டில் நடைபெறும் நல்ல விளைச்சலை அறிய இப்பொருட்காட்சி ஒரு நல்ல வாய்ப்பு.

---

ரத்தினம் தலைமைச்சங்க உபதலைவர் திரு. எ பி எல்லபொல, இன்டுறுவ கிளைச்சங்கத் தலைவர் திரு. எச். பி டி. சில்வா, மொரட்டுவா கிளைச்சங்கத் தலைவர் திரு எச். பி டல்பதடு ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள். [ந. நி]

---

### அமெரிக்க விமானம தாங்கிக்கப்பல் தீக்கிரை

லண்டன், ஜூலை 29

டொன்கின் வளைகுடாவில் அமெரிக்காவின் சக்திமிக்க நவீன விமானம் தாங்கிக் கப்பல் தீ மூண்டு நாசமாகி விட்டது.

அமெரிக்காவிடமுள்ள விமானம் தாங்கிக் கப்பல்களில் முதன்மைமிக்க விமானம் தாங்கிக் கப்பல் இது தான் என அறிவிக்கப்பட்டது. தனது கடமையைச் செய்யப் புறப்பட்ட சமயத்திலேயே இந்த விபத்து நடந்தது.

---

வியாபாரம பெருக
விளமபரமசெய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org